நோக்கத்தோடுதான் கனம் உறுப்பினர் அவர்கள் இருப்பார் என்று நான் எண்ணினேன். இப்பொழுது கனம் உறுப்பினர் கூறுவது எனக்கு விந்தையாக இருக்கிறது.

சீனிவாச சுப்பராய பாலிடெக்னிக்

* 213 வினா—திரு. கே. பி. எஸ். மணி: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை பளிப்பாரா—

சீர்காழி தாலுக்காவிலுள்ள "சீனிவாச சுப்பராய பாலிடெக்னிக்" கில் போதுமான அளவு மாணவர்கள் சென்ற இரண்டு ஆண்டுகளாக சேராததால் அடுத்த ஆண்டில் (1969-70) மூடிவிட ஏதேனும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மாணவர்கள் இந்தப் பாலிடெக்னிக்கில் இரண்டு ஆண்டுகளாக அதிகமாகச் சேராமல் இருப்பதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்தப் பாலிடெக்னிக்கில் 1968-69-ல் 50 மாணவர்களும், 1969-70-ல் 66 மாணவர்களும் சேர்ந்தனர். அதிகமான அளவில் மாணவர்கள் சேராததற்குக் காரணம் என்னவென்றால், எதிர்காலத்தில் தங்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்காமல் போகுமோ என்று பயப்படுவதாகத் தெரிகிறது. ஆனால் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் அமலுக்கு வருகிற நேரத்தில் இப்படிப்பட்ட தொழிற் பயிற்சியுடையவர்களின் தேவை ஏற்படலாம். இனி வருங் காலத்தில் தொழில் படிப்புள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு அதிக அளவில் கிடைக்கலாம் என்ற அடிப்படையில்தான் இந்தத் தொழில் பள்ளி மூடப்படவில்லை.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற பல்வேறு பள்ளிகளில் போதிய மாணவர்கள் இல்லாமல் குறைவாக இருக்கிறார்களா? ஒவ்வொரு பள்ளியிலும் எத்தனை மாணவர்கள் இருக்கிறார்கள் என்ற கணக்கைச் சொல்ல முடியுமா? குறைவாக சேர்ந்துள்ள பள்ளிகளில் அந்தக் குறையை நிரப்ப என்ன முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலிலேயே பதில் கூறியிருக்கிறேன். இடையிலே மாணவர்களின் எண்ணிக்கை ஓரளவு குறைந்தது. இனி வருகிற ஆண்டுகளில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எத்தனை மாணவர்கள் ஒவ்வொரு பள்ளியிலும் என்ற கணக்கிற்கு தனிக்கேள்வி போட்டால் சொல்ல முடியும். சீர்காழி சீனிவாச சுப்பராய பாலிடெக்னிக்கில் 120 மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள வசதி இருக்கிறது. ஆனால் 1968-69-ல் 50 பேர்களும், 1969–70-ல் 66 மாணவர்களும்தான் சேர்ந்திருக்கிறார்கள்.

1970 மார்ச் 5]

THIRU T. MARTIN: Sir, may I request the Hon. Minister to state the number of students who have passed from this Polytechnic and who are now unemployed in this State?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 214, 215, 216 ஆகியவை பிறகு எடுத்துக்கொள்ளப்படும். அடுத்த வினா 217.

அரசு கிடங்குகளுக்கு வந்துசேர வேண்டிய அரிசி

*217 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969 அக்டோபர் மாதத்தில், ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஆவடி குடோனுக்குப் போக வேண்டிய 12 லாரி அரிசி காணமல் போனது உண்மையா?

(இ) ஆம் எனில், அவை மொத்தம் எத்தனை மூட்டைகள்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ).

1969-ம் ஆண்டு மே, ஜூன், ஜூலை மாதங்களில் எழும்பூர் ரயில்வே கிடங்கிலிருந்து தமிழ்நாடு அரசு கிடங்குகளுக்கு வந்து சேர வேண்டிய 12 லாரி அரிசி காணமற்போனது. அதில் மொத்தம் 1,095 மூட்டைகள் அனுப்பப்பட்டன. இது சம்பந்தமாக வழக்கு நீதி மன்றத்தின் விசாரணையில் இருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, அரிசி ஏற்றப்பட்ட அத்தனை லாரிகளும் அரசுக்குச் சொந்தமான லாரிகளா? அல்லது வழக்கம்போல் தனியார் துறையிலிருந்து வருகின்ற லாரிகளா? அன்றையதினம் மட்டிலும் திடீரென்று கண்டுபிடிக்கப்பட்ட லாரிகளா? அல்லது ஒவ்வொரு லாரியாக, இரண்டு இரண்டு லாரியாகக் கண்டுபிடிக்கப்பட்டதா? அல்லது 12 லாரிகளும் ஏக காலத்தில் சிக்கியதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அது சர்க்கார் லாரி அல்ல. காண்ட்ராக்டர் லாரிதான். பிடிக்கப்பட்ட 12 லாரிகளைப் பற்றிய முழு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வழக்குப் பதிவுசெய்யப்பட்டு விசாரணை நடைபெறுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, 1095 மூட்டைகள் கடத்திச் செல்லப்பட்டுவிட்டன என்று கூறினார்கள். அந்த மூட்டைகளில் எவ்வளவு போலீசாரால் கைப்பற்றப்பட்டன என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மூட்டைகள் கைப்பற்றப்படவில்லை. குற்றவாளிகள் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். வழக்கு நீதி மன்றத்தில் இருக்கிறது.